[1981 ஜனவரி 24

உப்பனாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 32—திரு. ப. பொன்னுரங்கம் : திரு. பாபு கோவிந்தராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கடலூரில் ஸ்டேட் பாங்குக்கும், சிங்காரத் தோப்பிற்கும் இடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் கட்டுமானப் பணி எப்போது தொடங்கி எப்போது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இப்பணி சம்பந்தமாக திருத்திய மதிப்பீடு தலைமைப் பொறியாளரிடமிருந்து வந்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இது சம்பந்தமான அரசு ஆணை பிறப்பித்த பின்னர் வேலை துவங்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்திலே இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டது. முந்தைய அரசு இருந்தபோது கூட நான் இதுபற்றி கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன். அப்போது உப்பனாற்றின் குறுக்கே ஸ்டேட் பாங்கிற்கும் அதற்கு எதிரே உள்ள பகுதிக்கும் இடையே அந்தப் பாலம் உடனடியாக அமைக்கப்படும் என்று சொன்னார்கள். 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த அ.தி.மு.க. அரசே அதற்கு உறுதி அளித்தது. ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது சொல்கிறார்கள், அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறோம், அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று. ஏற்கனவே கால தாமதமாகிவிட்டது. இது மிகவும் அத்தியாவசியமானது. நானே போயிருந்தபோது நடந்ததைச் சொல்கிறேன், என்னுடைய பெர்சனல் எக்ஸ்பீரியன்ஸ் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது கேள்வியாகக் கேட்க வேண்டும். விவரங்கள் சொல்லக் கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம் : ஏற்கனவே கால தாமதமாகி விட்டது. அந்தப் பாலத்தை உப்பனாற்றின் குறுக்கே உடனடியாக அமைக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பாலத்தை அமைக்க $13\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவிலே 1975-76-ம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழே கொண்டு வர முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இந்தப் பாலம் அமைக்கப்பட்டால் போக்கு

வரத்துக்கு சரிவர இணைப்பை ஏற்படுத்தாது என்றும் துறை முகத் துறையினருக்கு விண்ணப்பித்தபோது அந்த இடத்திலே அமைத்தால் துறைமுகப் பணிகள் பாதிக்கக்கூடும் என்றும், ஆகவே அதை சோழங் குப்பத்திற்கு மாற்றக் கோரி ஆலோசனை வழங்கினார்கள். அந்த அடிப்படையிலே திருத்திய மதிப்பீடுகள் 34 இலட்ச ரூபாய் அளவிற்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முன்னாள் முதலமைச்சர் அவர்களால் இப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட சமயத்தில் இந்தப் பாலம் கட்டப்பட்டு நல்ல முறையிலே செயல்படுகிற வகையிலே இடையிலே சிறிய 'போட்கள்' இடைஞ்சல் இல்லாமல் செல்வதற்கு வசதியாகவும் போக்குவரத்துக்கு வசதி ஏற்படும் வகையிலும் விஸ்தாரமாக இடம் விட்டு கட்டப்படக் கூடிய முறையிலே தான் அப்போது இருந்த அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கியது.

மறுகரைப் பகுதியில் வசிக்கின்ற ஏறக்குறைய இருபது முப்பதாயிரம் பேர்கள் ஜனங்கள், பொதுவாகத் தாய்மார்கள் இக்கரை வருவதற்குச் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் வருவதற்கு வசதி செய்ய வேண்டுமென்ற நிலையிலே ஆரம்பிக்கப்பட்டது. ** ** **

(முற்பகல் 9–50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காரண காரியங்களுக்குப் போகாமல் கட்டாததற்கு என்ன காரணம் என்ற அளவோடு முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் இல்லையென்றால் அவரை விட்டுக் கேட்கச் சொல்லுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : $13\frac{1}{2}$ இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கக்கூடிய பாலத்தை கட்ட முன்வராமல், 34 இலட்சம் ரூபாய்க்கு ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டு காலதாமதம் ஏன் செய்ய வேண்டும்? பழைய திட்டத்தின்படியே அமலுக்குக் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன்; துறைமுக நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்கின்ற காரணத்திற்காகத்தான் சிங்காரத் தோப்பிலிருந்து சோனாங்குப்பம் வழியாக அமைக்க வேண்டுமென்று திருத்திய மதிப்பீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த திட்டம் என்பதற்காக ஒதுக்கப்படவில்லை. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்குப் பதில் சொன்னால் போதும்.

திரு. க. அன்பழகன் : ** ** கேள்விக்குப் பதில் அளிக்கின்ற பொழுது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகின்ற முறையில் சொல்வது இந்த அவையிலே ஏற்கனவே அனுமதிக்கப்படவில்லை அனுமதிக்கப்படாது என்று தெரிந்திருந்தாலும் வேண்டுமென்றே சொல்லும் ஒரு மனப்பான்மை இருந்தால் ஒன்று அப்படிச் சொன்னவர்கள் அதை வாபஸ் பெற வேண்டும்; இல்லையென்றால் தலைவரவர்கள் அதை நீக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பதை மட்டும் நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, அமைச்சருடைய பதிலிலேயிருந்து அந்தப் பாலம் கட்டுகின்ற இடம் சிங்காரத் தோப்பிலேயிருந்து வேறொரு இடத்திற்குச் செல்லும் இடம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே சாயில் டெஸ்ட்—மண் பரிசோதனை செய்யப்பட்டு அங்கே கட்ட முடியாது என்று முடிவெடுத்தார்கள். அதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அப்படியென்றால் பழைய திட்டத்தையே அமல்படுத்துவார்களா?

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேள்வி கேட்டபொழுது சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்ன கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது, என்ன பதில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நடவடிக்கைக் குறிப்பில் பார்த்த பிறகு சொல்கிறேன். அதுவரை பத்திரிகைகளிலேயும் அது வர வேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் **ஆணைக்கிணங்க** அகற்றப் பெற்றது.

1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சிங்காரத் தோப்பிற்கும், சோனாங் குப்பத்திற்கும் இடையில் பாலம் அமைத்து அணுகுசாலை ஒன்றை அமைக்கும் திட்டத்திற்குத்தான் 34 இலட்சம் ரூபாய். ஏற்கனவே போடப்பட்ட திட்டத்தின்படி பாலத்திற்கு மட்டும் $13\frac{1}{2}$ இலட்சம் ரூபாய். ஆகவேதான் இந்த மதிப்பீடு அதிகமாகியிருக்கிறது. மேலும் நான் வருகின்ற 1-ம் தேதி கடலூருக்குச் செல்லவிருக்கிறேன். அப்படிப் போகின்ற நேரத்தில் அந்தப் பகுதியையும் பார்வையிடுவதாக இருக்கிறேன்.

கோட்டூர்புரம்—நந்தனம் இணைப்புப் பாலம்

வினா எண் 33—திரு து. புருடோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை கோட்டூர்புரம்—நந்தனம் பகுதிகளை இணைக்கும் வகையில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) விரைவில் இப்பணி நிறைவேற்றப்படும்.

திரு. து. புருடோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலத்தைப் பற்றிய கேள்வி இது. அந்த ஆட்சி, இந்த ஆட்சி என்று ஆரம்பிக்காதீர்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஏற்கனவே விளக்கம் கொடுத்து, அதை நான் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அடுத்த கேள்வியும் அதே முறையில் போகக் கூடாது.

திரு. துரைமுருகன் : ஆட்சி என்று சொன்னதை ஆட்சேபிக்க வில்லை. ** * என்று சொன்னதை நீக்க வேண்டுமென்று கேட்பது தப்பா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தப்பு என்று சொல்லவில்லை. கோபப்படாமல், சாதாரணமாகவே கேட்கலாமே.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.